**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 280/2024

**ம.சா. 1**

**திருமதி. பிரபாவதி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்ப 1-2 டுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த ரோடு ஈரோடு-கோபி கிழமேல் ரோடு. நான் ஓட்டி வந்த வாகனமானது பதிவு செய்து 15 ஆண்டுகளுக்கு மேலான தகுதி இழந்த வண்டி என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணத்தில் எனது வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை என்பதால் அபராதம் விதிக்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் இல்லை. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தேன். காலை 6.30 மணி என்பதால் சிக்னல் இயங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து தென்புறம் செல்லும் வாகனங்களும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும் வாகனங்கள் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்லவேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது கிழமேல் சாலையில் தென்புற பகுதியில் என்றால் ஈரோடு - சத்தி மற்றும் குன்னத்தூர் பிரியும் இடத்தில் சற்று தென்புறமாக நடந்தது. 1ம் எதிர்மனுதாரர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து திருப்பூர் ரோட்டிற்கு செல்வதற்காக சென்ற சமயம் தான் நான் அவர் மீது மோதி

விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வாகனத்தை இயக்கும்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து தெற்கே திரும்பும் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை சரியாக கவனித்து எனது வாகனத்தை இயக்கியிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தில் 2வது டிஸ்சார்ஜ் சம்மரியில் எனக்கு இருதய தமனியில் கொழுப்பு அதிகமாக இருப்பது சம்பந்தமாக நோய்க்காக வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி என்றால் சரியல்ல. மேற்படி சிகிச்சைக்கும், விபத்தினால் ஏற்பட்டதாக கூறும் காயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சிகிச்சை ஆவணமானது விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கும் சேர்த்து தொகை பெறவேண்டும் என்பதற்காக ம.சா.ஆ.7 ஆவணத்துடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபி மருத்துவமனை வழங்கிய மருத்துவ ரசீது ரூ.56,784/- நான் இந்த வழக்கில் பெற அருகதையில்லை என்றால் சரியல்ல. மேற்படி அபி மருத்துவமனையில் 13-09-2024 தேதியில் செலுத்தியதாக கூறும் ரூ.10 ஆயிரம் முன்பணமும் என்னால் பெற அருகதையில்லை என்றால் சரியல்ல. 2024-25 க்கான வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எந்தவிதமான வருமானமும் 2024-25 ல் இல்லை என்பதால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்க்ல செய்யவில்லை என்றும், மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் எனக்கு பாதகமாக போய்விடும் என்பதால் தான் தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பு

உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. பிசியோதெரபி சிகிச்சை எதுவும் நான் தொடர்ந்து நான் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு எடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் எனக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.